මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் அமைச்சு
**MINISTRY OF FINANCE AND PLANNING**

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව. | செயலகம், கொழும்பு 01. இலங்கை | The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: 2484500, 2484600, 2484700 | ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94) - 11 - 2449823 | වෙබ් අඩවිය / வெப்சைட் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: PF/FS/01 | ඔබේ අංකය / உமது இல. / Your No.: | දිනය / திகதி / Date: 2008.10.

அரச நிதிச் சுற்றறிக்கை இல. 434

சகல அமைச்சுச் செயலாளர்கள்,
மாகாண சபை பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்கள்,
உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள்,
அரசாங்க கூட்டுத்தாபனங்கள்,
அரச வங்கிகள்,
நியதிச் சட்டமுறைச் சபைகள் மற்றும்
அதிகார சபைகளின் தலைவர்கள் அனைவருக்கும்.

## மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் திறைசேரியின் நிதியுதவியுடன் செயலாற்றும் சட்டமுறை நிறுவனங்களுக்குக் கட்டணம் அறவிடப்படாமல் மதிப்பீட்டுச் சேவைகளை வழங்குதல்

மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள், அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டமுறைச் சபைகளினால் அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும் சேவைகளுக்கு மதிப்பீட்டுச் சேவைக் கட்டணங்கள் செலுத்துவதற்கு முடியாமல் இருந்தமை காரணமாக குறித்த நிறுவனங்கள் எதிர்கொள்ளும் பல்வேறு கஷ்டங்கள் மற்றும் அந்த மதிப்பீட்டு விடயங்கள் மூலம் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ள இயலாமை ஆகிய விடயங்கள் மீது கவனம் செலுத்தியுள்ள அமைச்சரவை பின்வருமாறு கருமமாற்றுவதற்கு 2008.09.17 ஆம் திகதியன்று அங்கீகாரம் அளித்துள்ளது.

(அ) இதன்பின்னர் மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் பொதுத் திறைசேரியிலிருந்து நிதியுதவியுடன் செயலாற்றும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் சட்டமுறை நிறுவனங்களுக்குத் தேவையான மதிப்பீட்டுச் சேவைகளை அரசாங்க மதிப்பீட்டாளரினால் கட்டணம் அறவிடாமல் மேற்கொள்ளல்.

(ஆ) மேலே (அ) வில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களிடமிருந்:து மதிப்பீட்டுத் திணைக்களத்துக்கு செலுத்தப்பட வேண்டியுள்ள நிலுவை மதிப்பீட்டுக் கட்டணங்களை அறவிடாமலிருத்தல்.

(இ) பொதுத் திறைசேரியின் நிதியுதவியுடன் செயற்படாத அரசாங்க கூட்டுத்தாபனங்கள், சட்ட முறைச் சபைகள், அரசாங்க வங்கிகள், மற்றும் ஏனைய சட்டமுறை நிறுவனங்களுக்கு வழங்கப்படும் மதிப்பீட்டுச் சேவைகளுக்கு பொதுத் திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் நிச்சயிக்கப்படும் மதிப்பீட்டுக் கட்டணமொன்றை அறவிடல்.

02. மதிப்பீட்டுக் கட்டணம் செலுத்துவதற்கு போதியளவு நிதி ஒதுக்கீடுகள் இல்லாமை காரணமாக தற்போது நிறுத்தப்பட்டுள்ள மதிப்பீட்டு விடயங்களைத் தாமதமின்றி மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் நிறைவேற்றிக் கொள்வதன் பொருட்டும், அதன் மூலம் தமது வருமானத்தை விருத்தி செய்து கொள்வதற்கு மேலே (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனத் தலைவர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என தயவுடன் அறியத் தருகின்றேன்.

03. தாபன விதிக் கோவை, நிதி ஒழுங்கு விதிகளில் உரித்துடைய பந்திகள் மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகள் சம்பந்தமாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மேலே அமைச்சரவைத் தீர்மானத்துக்கு அமைவாக திருத்தம் செய்யப்படும்.

ஒப்பம்: எஸ்.அபேசிங்க

திறைசேரிச் செயலாளர்

பிரதிகள் :-

1. செயலாளர், அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.
2. கணக்காய்வாளர் தலைமை அதிபதி.
3. பிரதான மதிப்பீட்டாளர்.
4. தாபன பணிப்பாளர் நாயகம்.